செ.வெ.எண். 37/செப்டம்பர்　　　　　　　　　　　　　　　　　　தேதி : 14.09.2016

# வரைவு வாக்குச்சாவடிகள் பட்டியல் மீதான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கருத்தறியும் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




வரைவு வாக்குச்சாவடிகள் பட்டியல் மீதான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கருத்தறியும் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் உள்ள மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 11,59,951 ஆகும். கிராம ஊராட்சிகளில் 9 இலட்சத்து 94 ஆயிரத்து 149 வாக்காளர்களும், பேரூராட்சிகளில் 1 இலட்சத்து 15 ஆயிரத்து 489 வாக்காளர்களும், தருமபுரி நகராட்சியில் 50 ஆயிரத்து 313 வாக்காளர்களும் உள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள 251 கிராம ஊராட்சிகள், 10 பேரூராட்சிகள், 10 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் தருமபுரி நகராட்சி ஆகியவற்றில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அக்டோபர் - 2016 மாதத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது. 2016 ஆம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலின் போது பல உறுப்பினர் வார்டுகளை தனி உறுப்பினர் வார்டுகளாக நிர்ணயிக்கப்பட்டு ஒவ்வொரு கிராம ஊராட்சிகளையும் அதன் மக்கள் தொகைக்கேற்ப 6,9,12 மற்றும் 15 வார்டுகளாக வரையறுக்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சி வார்டுகளின் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கேற்ப வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்ச வாக்காளர் எண்ணிக்கை 400 ஆகவும், அதிக பட்ச வாக்காளர் எண்ணிக்கை 1000 ஆகவும் அமைக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற ஊராட்சி அமைப்புகளில் அமைக்கப்பட்டுள்ள வரைவு வாக்குச்சாவடிகளின் பட்டியல் கடந்த 07.09.2016 முதல் மாவட்ட தேர்தல் / மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சி வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை -1664, பேரூராட்சி வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை - 176, நகராட்சியில் அமைக்கப்பட்டுள் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை - 56 ஆக மொத்தம் 1896 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளது.

கடந்த 2011 உள்ளாட்சித்தேர்தல்களில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகளையே நடப்பு 2016 உள்ளாட்சித் தேர்தல்களிலும் வாக்குச்சாவடிகளாக அமைக்கப்பட்டுள்ளன. வாக்காளர் எண்ணிக்கை 1000 எண்ணிக்கையை கடந்த வார்டுகளில் ஆண் வாக்குச்சாவடிகள் மற்றும் பெண் வாக்குச்சாவடிகளாக அமைக்கப்பட்டுள்ளன. வாக்காளர் எண்ணிக்கை குறைவாக உள்ள வார்டுகளை அதே கிராம ஊராட்சியில் அதனை நெருங்கியுள்ள குறைவான வாக்காளர்களை கொண்ட பிரிதொரு வார்டுக்கும் சேர்த்து பொதுவான ஓரிடத்தில் ஒருங்கிணைந்த ஒரே வாக்குச்சாவடியாக அமைக்கப்பட்டள்ளது.

கிராம ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள தனி வார்டு வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 962, இரு வார்டு வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 702, ஒரு வார்டின் பொதுவான இடத்தில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு இடத்திலும் ஒரு வாக்காளர் வாக்குச்சாவடியை சென்றடைய 2 கி.மீ மேல் பயணம் செய்யாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி. சித்ரா, ஊராட்சி உதவி இயக்குநர் (பஞ்சாயத்துகள்) திருமதி. ஆர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) திரு. சரவணன், பாலக்கோடு சர்க்கரை ஆலை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. துர்காமூர்த்தி, கோட்டாட்சியர் திரு.இராமமூர்த்தி, திருமதி. கவிதா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.